(ஓடுமனஞ்செய்கையுரையொன்றினில்லாதாருடனேகூடி) சஞ்சலமாய நின்றவாநில்லாநெஞ்சும், அதின்வழியையபின் செல்லும்வாககாயங்களும், ஒருமைப்பட்டு நடக்கையின்றிககே, செவ்வைகெடநடக்கும்குடிலரோரடுகூடிக்கலந்து. (நெடுமாலடிமைகொள்ளுநிலை) ஸர்வஸ்மாதபரனானவ னடிமைகொள்ளு மாாஜவஸ்வபாவத்தை. (நாடறியவோர்ந்து) நாட்டாரறியும்படி யாராய்ந்து. (அவன்றன்செம்மை) “ தேநதேதமநுவ்ரதாঃ ” (தேநதேதமநுவ்ரதாঃ) “ ராமோராஜ்யமுபாஸித்வா ” (ராமோராஜ்யமுபாஸித்வா) என்னும்படியான அவனுடையஆர்ஜவத்தை. (உரைசெய்த) அருளிசசெயத. அதாவது- “ ஓடும்புள்ளேறிசசூடுநதண்டுழாய் நீடுநின்றவை யாடுமம்மானே ” என்று - நித்யஸூரிகள் திறததில்பரிமாறு மாாஜவத்தையும், “ அம்மானாய் ” என்றும், “ கண்ணாவான் ” என்றும், “ நீாபுரைவண்ணன் ” என்றுமளவும் நிதயஸம்ஸாரிகளோடே செவ்வையனாய்ப் பரிமாறுமார்ஜவத்தையு மருளிச்செய்தாரென்கை. இப்படிஉரைசெய்த (மாறனென) ஆர்ஜவகுணத்தையருளிச்செய்த ஆழ்வாரென்றநுஸந்திக்க. (ஏய்நதுநிறகும்வாழ்வாமிவை) ஸவரூபாநுரூபமான ஸம்பத்தாயுளளவை யெல்லாம் பொருந்தி “ சென்றென்றுநின்றதிரு ” என்னும்படிநிலைநிறகும். ....(அ)

முதற்பத்தில் எட்டாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஆக - திருவாய்மொழி - அ—பாட்டு - அஅ.

ஸ்ரீ

திருவாய்மொழி.

முதற்பத்து.

ஒன்பதாந்திருவாய்மொழி.

இவையும் - ப்ரவேஶங்கள்.

பன்னீராயிரப்படி.

ஒன்பதாந்திருவாய்மொழியில், இப்படிஆர்ஜவகுணத்தையுடைய ஸர்வேஶ்வரன், "பொய்கலவாதென்மெய்கலந்தான" என்றும், "என்னெண்டானானென்" என்றும், கீழ்வாசொன்ன க்ரமத்திலேதன்னுடைய குணவிக்ரஹமஹிஷீ பரிஜநவிபூதிசேஷ்டிதங்களோடேகூட இவரோடேபரிபூர்ணமாக ஸம்ஶ்லேஷித் தநுபவிப்பிக்கப்பாரித்து, "இவர்வெள்ளக்கேடாயுடைகுலையப்படிற்செய்வதென" என்றுபார்த்து, ஸாத்மிக்கஸாதமிக்க புஜிப்பிப்பானாக, இவர்பரிஸரத்திலேவர்த்திப்பது, இவருக்கந்திகஸ்த்தனாவது, கூடஇற்பது, இவர்ஶரீரத்திலொரு பக்கததிலேயாவது, ஹ்ருதயப்ரதேஶததிலேயாவது, தோள்களிலேசேர்வது, நாவிலேநிறபது, கண்ணுக்குளேயாவது, நெற்றியிலேயாவது, உச்சியிலேயாவதாகக்கொண்டு, க்ரமததிலேபோகம் தலைமண்டையிடும்படி ஸாத்மிக்கஸாத்மிகக ஸம்ஶ்லேஷித்தபடியை யருளிச்செய்கிறார். ....❋

ஈடு.

கீழ்த்திருவாய்மொழியிலே அவனுடைய ஆர்ஜவகுணாநுஸந்தாநம்பண்ணினார்; இப்படியநுஸந்தித்தார் விஷயத்தில் ஸர்வேஶ்வரனிருக்கும்படியை யருளிச்செய்கிறாரிதில். ஸர்வேஶ்வரனாய் ஶ்ரிய:பதியாய் பரமரஸிகனாயிருக்கிறவன், ஆழ்வார்பக்கலிலே துவகனுண்டு இவரோடே யேகரஸனாயிருந்தான்; ஆழ்வாராகிறார், கீழில் ஆர்ஜவகுணாநுஸந்தாநத்தாலே அவன்பக்கலிலே பெரியவிடாயை யுடையரானார்; "இதுநமக்கு நல்லவாய்ப்பாயிருந்தது" என்றுபார்த்து, அர்ஜுநன், விபூதிஶ்ரவணத்தாலே "விபூதிமானானவனைக்காணவேணும்" என்றபேக்ஷிக்க, அதுக்குறுப்பாக "திவ்யம் ததாமி தே சக்ஷு:" (திவ்யம்ததாமிதேசக்ஷு:) என்கிறபடியே - திவ்யசக்ஷுஸ்ஸைக்கொடுத்து வைஶ்வரூப்யத்தைக் காட்டினாற்போலே, இவர்க்கும் தன்னையநுபவிக்கைக்கீடான விடாயைப்பிறப்பித்

துத்தன்னை யநுபவிப்பிக்கிறுன் நித்யவிபூதியிலுள்ளாரோடு பரிமாறுமா போலே பரிமாறக்கோலி. அதாவது - பிராட்டிமாரோடு பரிமாறுவது, மஹிஷிகளான முறையாலே; திருவடியோடுபரிமாறுவது, வாஹநமான முறையாலே; திருவநந்தாழ்வானோடு பரிமாறுவது, படுக்கையானமு றையாலே; இப்படியவர்களோடு ஒரோமுறையாலே பரிமாறும்பரிமாற் றமெல்லாம் இவரொருவரோடு பரிமாறுகிறுனுய், அதுதன்னை, குளப்ப டியிலே கடலைமடுத்தாற்போலேயன்றிக்கே, பொறுக்கப்பொறுக்கப்பரி மாற, இவருமவனை ஸர்வேந்த்ரியத்தாலும் ஸர்வகாத்ரத்தாலும் யதாம நோரதமநுபவித்து, அவ்வநுபவஜநித ப்ரீதியாலேயவனைப்பேசி யநுப விக்கிறுர். .... *

ஜீயர் அரும்பதம்.

இவையும்ப்ரவேஶே, வ்ருத்தாநுவாதபூர்வகமாகஸங்கதி (கீழிலித்யாதி) (ஸர்வேஶ்வர னிருக்கும்படியை யருளிசசெய்கிறுர்) ஸாதம்யபோகபரதத்வ ம ருளிச்செயகிறுரென்றபடி.

விஸ்தரஸங்கதி (ஸர்வேஶ்வரனுயித்யாதி) " இவையுமவையும் " இத்யா தியையும், " திருவின்மணுளன், சுவையன் " இத்யாதியையும்பற்ற (ஸர்வேஶ் வரனுயிதயாதி விஶேஷணத்ரயமும்) அவக்குணடு - ஈடுபட்டு. (இது) அந்யோ ந்யப்ராவண்யமுண்டான விதுநல்லவாய்ப்பா யிருந்ததென்றபடி. இதிறபண்ணுகி ற ஸர்வாங்க ஸம்ஶ்லேஷத்தையடியிலே பண்ணுமைக்கடியை ஸதருஷ்டாநதமாக வருளிசசெயகிறுர் (அர்ஜுநனித்யாதி) " அபேக்ஷிகக " எனகிறவிடததிலே - " [illegible] " (ஏவமேததயதாத்ததவமாத்மாநமபரமேஶ்வர। த்ரஷடுமிச்சாமிதேரூபமைஶ்வரம்புருஷோததம) எனறகீதாவசநமநுஸநதேயம். கீதாஸ்வேகாதஶே, " [illegible] " (நதுமாமஶ க்யஸேதரஷடுமநேநைவஸ்வசக்ஷுஷா। திவ்யநததாமிதேசக்ஷுஃபஶ்யமேயோ கமைஶ்வரம்.) விடாயைபபிறபபிதது - பகதிரூபாபநநஜ்ஞாநததை விஶதமாக்கி. கோலி - " அநுபவிப்பிக்கிறுன " இதிபூர்வேணுநவயஃ.

" அருகலிலான் " என்கிறபாட்டைக்கடாக்ஷித்து (பிராட்டிமாரோடித்யா தி) ஸர்வேநதரியததாலுமென்றது - " நெஞ்சினுளான் " " கண்ணினுளான " இ த்யாதியைப்பறற. ஸர்வகாத்ரததாலுமென்றது - " ஒக்கலையான் " " நெறறியுளா ன " " உச்சியுளான் " இதயாதியைபபறற. " சூழலுளான் " எனறுதொடங்கிச் சொன்னதுக்கு தாத்பர்யம் (பொறுக்கப்பொறுக்கவிதயாதி) அவனைபபேசி - அ வனகுணங்களைப்பேசி..*

ஒன்பதாந்திருவாய்மொழி.

முதற்பாட்டு.

இவையுமவையுமுவையுமிவருமவருமுவரும்
யவையுமயவருந்தனுள்ளேயாகியுமாக்கியுங்காக்கு
மவையுட்டனிமுதலெம்மான்கண்ணபிரானென்னமுதஞ்
சுவையன்றிருவின்மணாளனென்னுடைச்சூழலுளானே.

ஆறாயிரப்படி.

(இவையுமவையும்) இப்படியெம்பெருமானென்னோடு ஸம்ஶ்லேஷித்தருளினானென்கிறார்.

ஸ்வஸங்கல்பக்ருத நிகில ஜகதுதயவிபவலயலீலனாய, ஸர்வஜ்ஞகதாத்மபூதனானவன் என்னோடு ஸம்ஶ்லேஷிக்கையிலுள்ள வபிநிவேஶத்தாலே யென்னை வஶீகரிக்கைக்காக வென்னுடைய சூழலிலே வந்து புகுந்தானென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

முதற்பாட்டில், ஸர்வகாரணத்வ ஸர்வாந்தராத்மத்வத்தாலே ஸர்வஶேஷியாய் ஸர்வஸுலபனான ஸ்ரீயஃபதி, என்னுடையபரிஸரத்திலே அநுரவர்த்தியாகாநின்றானென்கிறார்.

இவையுமவையுமுவையும் - அந்திகஸ்த்தமாயும் தூரஸ்த்தமாயும் அதூரவிப்ரக்ருஷ்டமாயுமுள்ள அசேதநங்களும். இவருமவருமுவரும் - ஏவம்வித சேதநரும். யவையும்யவரும் - எல்லாம். ஸம்ஹ்ருதிஸமயத்திலே தன்னுள்ளே - தன்னுள்ளே. ஆகியும் - ஆம்படியாயும். ஆக்கியும் - ஸ்ருஷ்டிஸமயத்திலே யுண்டாக்கியும். காக்கும்-ஸ்ருஷ்டமானவற்றுக்கு ஆபத்துக்களைப்போக்கி அபிமதங்களைக்கொடுத்து ரக்ஷிக்குமவனுமாய். அவையுள் - அவற்றினுள்ளே அந்தராத்மாவாயும். தனிமுதல்-உள்ளே ஸஹாயாந்தர நிரபேக்ஷ காரணமுமாய். அம்மான் - ஸ்வாமியுமாய். கண்ணபிரான் - க்ருஷ்ணனான ஸௌலப்யத்தைக்காட்டி. என்னமுதம் - எனக்குபோக்யபூதனாய். என்னுடை - என்னுடைய. சூழலுளான் - சூழலிலேயானான.... ... *

ஈடு - முதற்பாட்டு.

ஸ்ருஷ்ட்யாதி ஹேதுபூதனுமாய ஸர்வாந்தராத்மாவுமான க்ருஷ்ணனானவ னென்னுடைய பார்ஶ்வத்தை விட்டுப் போகமாட்டாதபடியானானென்கிறார். அவனுடைய குணாநுபவத்தோடு விபூத்யநுபவத்தோடு வாசியில்லையிறே யிவர்க்கு. முதற்றிருவாய்மொழியிலே பரக்க வநுபவித்தவித்தை விஶதமாயிருக்கையாலே திரளவநுபவிக்கிறார்.

(இவையுமவையு மித்யாதி) சித்வர்க்கத்தையு மசித்வர்க்கத்தையும் திரளச்சொல்லுகிறது. (தன்னுள்ளேயாகியும) " இவையுமவையு

ம்" என்றிங்ஙனே பிரித்து வ்யவஹரிக்க வொண்ணாதபடி "ஸ்தேவ" (ஸதேவ) என்கிறபடியே - தானென்கிற சொல்லுக்குள்ளேயாம்படி தன்மேலே யேறிட்டுக்கொண்டு தரிக்கும்படியைச் சொல்லுகிறது. (ஆக்கியும்) "பஹுஸ்யாம்" (பஹுஸ்யாம்) என்கிறபடியே தன்பக்கலிலே நின்றும்பிரித்து, நாமரூப விபாகார்ஹமாம்படி பண்ணியும். (காக்கும்) ஸ்ருஷ்டமான பதார்த்தங்களை யிரக்ஷையாலே தடவி ரக்ஷிக்கும்படி. (அவையுள்தனிமுதல) ஸ்ருஷ்டமானபதார்த்தங்களிலே, இவை ப்ரவ்ருத்தி நிவ்ருத்யாதிகளுக்கு யோக்யமாம்படி யந்தராத்மாவாய் நிற்கும் நிலையைச்சொல்லுகிறது. இது - பின்னே, "ஆக்கியும்" என்று ஸ்ருஷ்டியைச்சொன்னபோதே சொல்லிற்றாகாதோவென்னில்; [தத்நுப்ரவிஶ்யஎன்று] இவற்றினுடைய வஸ்துத்வநாமபாக்த்வங்களுக்காகப் பண்ணுமநுப்ரவேஶத்தைச் சொல்லுகிறதங்கு; இங்கு இவற்றுக்குச்சொல்லும் வாசகஶப்தம் தன்னளவிலே பர்யவஸிக்கும்படியாக நிற்கும் நிலையைச் சொல்லுகிறது. (எம்மான) தன்விபூதிவிஷயமாகத்தனக்குண்டானவோரத்தைக்காட்டி யென்னை யநந்யார்ஹமாக்கினவன். (கண்ணபிரான்) இப்படியிருக்கிறவனன்றோ க்ருஷ்ணனென்கையும், அவன்றான் கண்ணுக்குத்தோற்றின னுபகரிக்குமென்கையும். (என்னமுதம்) தேவர்களதிகாரிகளா மம்ருதத்தில வ்யாவ்ருத்தி. (சுவையன்) அவ்வம்ருதத்துக்கு போக்த்ருத்வமில்லையே. சுவையன் - பரமரஸிகன். இந்தரஸிகத்வத்துக்கு ஊற்றுவாயசொல்லுகிறது (திருவின்மணாளன்) இவருடைய அம்ருதமொரு மிதுநமாயிற்று. (என்னுடைச்சூழலுளானே) பெரியபிராட்டியார் "அகலகில்லே னிறையும்" என்னப்பிறந்தவன், என் பரிஸரத்திலே வார்த்திக்கை தன்பேறாக வர்த்தியாநின்றான். "யஸ்ய ப்ரஸாதெவஸதம் ப்ரஸீதெயுரிமா꞉ப்ரஜா꞉ । ஸராமோவாநரெந்த்ரஸ்ய ப்ரஸாதமபிகாங்க்ஷதெ" (யஸ்யப்ரஸாதேஸததம்ப்ரஸீதேயுரிமா꞉ப்ரஜா꞉[ஸராமோவாநரேந்த்ரஸ்யப்ரஸாதமபிகாங்க்ஷதே) என்கிறபடியே; [லோகநாத꞉ புராபூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி] லோகநாத꞉ புராபூத்வா ஸுக்ரீவம்நாதமிச்சதி) தம்மையொழிந்தார்க்கெல்லாம்நாதரானவர் ஸுக்ரீவனை நாதனாகவிச்சியாநின்றார். கிடைப்பது, கிடையாதொழிவது,தாம் முந்துறமுன்ன மிச்சியாநின்றார்...*

ஜீயர் அரும்பம்.

முதற்பாட்டு. (இவையுமிதயாதி) "அவையுட்டனிமுதல்" கண்ணபிரான், என்னுடைச்சூழலுளான்" என்கிறபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை (ஸ்ருஷ்ட்யாதித்யாதி) ஸாதம்யபோக பரதத்வரூபகுணாநுபவம்பண்ணுகிறவிவர், விபூத்யநுபவம்பண்ணுகிறதெனனென்ன (அவனுடையவிதயாதி) குணங்களோபாதி,

ததீயதவாகாரத்தாலே விபூதியுமநுபாவ்யமாகையாலே சொல்லுகிறாரென்றபடி. ஆனால் "நாமவன்" என்கிறபாட்டிற்படியே பரக்கவநுபவியாதொழிவானென்னென்ன (முதற்றிருவாய்மொழியிலேயித்யாதி) புநருக்திபரிஹாரமாதல். திரள- ஸமுதாயமாக.

(இவையுமித்யாதி) ஸமீபஸ்தங்களாயும், தூரஸ்தங்களாயும், அதூரவிப்ரக்ருஷ்டங்களாயும் ஸமீபஸ்தராயும், தூரஸ்தராயும, அதூரவிப்ரக்ருஷ்டராயுமுள்ள. (யவையும்யவரும) சேதநாசேதநங்களெல்லாம். (தன்னுள்ளேயாகியும்) ஸம்ஹ்ருதிஸமயத்திலே தன்னுள்ளேயாம்படி பண்ணியும். (ஆக்கியும்) ஸ்ருஷ்டிஸமயத்திலே ஸ்ருஷ்டித்தும. (காக்கும) ஸ்ருஷ்டமானவற்றைரக்ஷிக்குமவனாய. (அவையுள் தனிமுதல்) அவற்றினுள்ளே யந்தராத்மாவாயுமுள்ள அத்விதீயகாரணமுமாயென்று ஸப்தார்த்தம். உக்தாநுவாதம் - "யவையும்யவரும" என்று. "ஆக்கியும்" என்று ஸம்ஹாரத்தைமுந்தச்சொல்லிற்று - ஸ்ருஷ்டி அப்யய பூர்விகையாகையாலே.

ஸ்ருஷ்டிக்குப்பிறபாடு அத்விதீயகாரணமாவது - ஸர்வாந்தராத்மாவென்னுமதுக்கு ஹேதுவையருளிச்செய்கிறார் (ஸ்ருஷ்டமானவித்யாதி) பூர்வவாக்யத்தை ஸங்க்ஷேபேண விவரிக்கிறார் (இதுபின்னையித்யாதி) இது - அநுப்ரவேஸம். "𑌅𑌨𑍇𑌨 𑌜𑍀𑌵𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑍇 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌵𑌾𑌣𑌿" (அநேநஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி) என்று - ஸ்ருஷ்டிக்கநுப்ரவேஸபூர்வகத்வம் ப்ரதிபந்நமாகையாலே, ஸ்ருஷ்டியைச்சொன்னபோதே அநுப்ரவேஸம் ஸித்தமாகாதோவென்று ஸங்காதாத்பர்யம். அந்தவநுப்ரவேஸத்திற்காட்டிலிங்குச்சொல்லுகிறதுக்கு வ்யாவ்ருத்தியை தர்ஸிப்பியாநின்றுகொண்டு, இங்குவிவக்ஷிதமான வநுப்ரவேஸத்தையருளிச்செய்கிறார் (அநேநஜீவேநேத்யாதி) ஆக, "ஆக்கியும்" என்கிறவிடத்திலே - "𑌅𑌨𑍇𑌨 𑌜𑍀𑌵𑍇𑌨" (அநேநஜீவேந) இத்யாதி வாக்யோக்தமான ஸ்ருஷ்ட்யர்த்தாநுப்ரவேஸஞ் சொல்லுகிறது; "அவையுட்டனிமுதல்" என்கிறவிடத்திலே ஸ்ருஷ்டமான பதார்த்தங்களுடைய ஸத்தாநிர்வஹணார்த்தமான ஸ்தித்யர்த்தாநுப்ரவேஸஞ் சொல்லுகிறதென்று கருத்து. ஸ்ருஷ்ட்யர்த்தாநுப்ரவேஸமென்றும், ஸ்த்தித்யர்த்தாநுப்ரவேஸமென்றும், அநுப்ரவேஸம த்விவிதம். காரணாவஸ்தையோடு கார்யாவஸ்தையோடுவாசியற ஸர்வதாஸித்தநுப்ரவிஷ்டனான பரமாத்மாவுக்கு ஸ்ருஷ்ட்யர்த்தாநுப்ரவேஸமாவதேது, ஸ்தித்யர்த்தாநுப்ரவேஸமாவதேதென்னில்; "𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌶𑌕𑍍𑌤𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌃" (தத்தத்கார்யாநுகுணஶக்திவிஶேஷம்) என்று ஸம்பிரதாயம். சிலஸ்ரீகோஸங்களிலே, "𑌅𑌨𑍇𑌨 𑌜𑍀𑌵𑍇𑌨" (அநேநஜீவேந) இத்யாதிவாக்யமில்லை, "இதுபின்னை" இத்யாதிஸங்காவாக்யாநந்தரம், "ததநுப்ரவிஸ்ய என்று இவற்றினுடைய வஸ்துத்வ நாமபாக்த்வங்களுக்காகப்பண்ணுமநுப்ரவேஸத்தைச் சொல்லுகிறதங்கு. இங்கிவற்றுக்குச் சொல்லும் வாசகஸப்தம் தன்னளவிலே பர்யவஸிக்கும்படியாக நிற்கும்நிலையைச் சொல்லுகிறது" என்று பரிஹாரவாக்யாவலி சிலஸ்ரீகோஸங்களிலேயிருக்கிறது. அந்தபக்ஷத்திலே "சொல்லிற்றாகாதோவென்னில, என்றவநந்தரம், 'அநேநஜீவேநாத்மநாநுப்ரவிஸ்ய என்று' என்றுகூட்டிக்கொள்வது, 'ததநுப்ரவிஸ்யவென்று' என்கிறதை

'இங்கு' என்றவநந்தரம் கூட்டிக்கொள்வது" என்று வாக்யத்தைத் திருத்துவார்கள். "தத் ஸ்ருஷ்ட்வா" (தத்ஸ்ருஷ்ட்வா) இத்யாதிவாக்யத்துக்கு - "அக்நிஹோத்ரம் ஜுஹோதி" (அக்நிஹோத்ரம் ஜுஹோதி) "யவாகூம் பசதி" (யவாகூம்பசதி) என்றவிடத்திற்போலே, பாடக்ரமத்தை யநாதரித்து ஆர்த்தக்ரமத்தை ஸ்வீகரித்து ததேவாநுப்ராவிஶத், தத்ஸ்ருஷ்ட்வா தத்நுப்ரவிஶ்ய ஸச்சத்யச்சாபவத் இத்யந்வய: கர்த்தவ்ய:. அங்கு - "ஆக்கியும்" என்கிறவிடத்திலே. இங்கு - "அவையுட்டனிமுதல்" என்கிறவிடத்திலே.

"இவையுமவையும்" இத்யாதிக்கநந்தரம், "எம்மான" என்றதுக்கு பாவம் (தன்விபூதியித்யாதி) ஓரம் - பக்ஷபாதம். "கண்ணபிரானென்றதுக்கு-க்ருஷ்ணனுபகரிக்குமவனென்னுதல், கண்ணுக்குவிஷயமா யுபகரிக்குமவனென்னுதல். இவ்வர்த்தத்வயத்தையும் தந்தோண வருளிச்செய்கிறார் (இப்படியிருக்கிறவித்யாதி) (க்ருஷ்ணனென்கையும) க்ருஷ்ணனுயவதவதரிக்குமவனென்கையும். "என்" என்றதுக்கு பாவம (தேவாகளித்யாதி) இழையுங்கூட்டிபாவம (அவ்வம்ருதத்துக்கித்யாதி) "சுவையன்திருவினமணாளன" என்கிறபதசசோத்திக்குபாவம் (இந்தவித்யாதி) "என்னமுதம் திருவினமணாளன" என்று கூட்டி பாவாந்தரம் (இவருடையவித்யாதி) "இந்த தாத்பர்யத்வயத்தாலும் - வாக்யத்வயோக்தமான புருஷகாரத்வோபேயத்வங்கள் ஸூசிதங்கள" என்று ஸம்ப்ரதாயம்.

"திருவினமணாளனென்னுடைச்சூழலுளான" என்று கூட்டி யவதாரணத்துக்குபாவம் (பெரியபிராட்டியாரித்யாதி) "இவையுமவையும" இத்யாதியாலே-மேன்மையைச்சொல்லி, "அவன்சூழலுளான" என்றதுக்கு த்ருஷ்டாந்தம் (யஸ்யேத்யாதி) கிஷ்கிந்தாகாண்டே சதுர்த்தே "ஸஷட்கூலவி த்ராநிபு்ரா வ்ருதாநாத்தமயஶ: । லோகநாத: புராபூத்வா ஸுக்ரீவம்நாதமிச்சதி" (ஏஷத்த்வாசவித்தாகிப்ராப்யசாநுத்தமம்யஶ: । லோகநாத: புராபூத்வா) இத்யாதி. வாத்தமாநார்த்தம் (கிடைப்பதித்யாதி) "உ வதி" (இச்சதி) என்கையாலே - தௌல்யம் ஸித்தம்.

க்ரமேணாந

இரண்டாம்பாட்டு.

சூழல்பலபலவல்லான்றொல்லைபங்காலத்துலகைக
கேழலொன்றாகியிடந்தகேசவனென்னுடையம்மான
வேழமருப்பையொசித்தான்விண்ணவர்க்கெண்ணலரியா
னாழநெடுங்கடல்சேர்ந்தானவனென்னருகலிலானே.

ஆறாயிரப்படி

(சூழல்பலபல) இப்படி யென்னுடைய சூழலிலே வந்துபுகுந்து, தன்னுடைய திவ்யசேஷ்டிதங்களையும ப்ரஹ்மாதி வாங்மநஸாபரிச்சேத்யமான தன்னுடைய கல்யாண குணங்களையு மெனக்குக்காட்டி யென்னைவஶீகரித்து, பின்னை யென்னருகே யெழுந்தருளினானென்கிறார். *

பன்னீராயிரப்படி

அநந்தரம், அவதாரமுகத்தாலே ஆஶ்ரிதோபகாரகனானவன், என்னருகே யானென்கிறார்.

சூழல் - ஆஶ்ரிதரை வஶீகரிக்கைக்கிடான சூழ்ச்சியையுடைய அவதாரங்களை. பலபல - பலவும். வல்லான் - தனிச்சையாலே பண்ணவல்லனாய். தொல்லை - பழையதாய். அம் - அவதாரோபயுக்தமாகையாலே யழகியதான. காலத்து - வராஹகல்பத்தின் முதலிலே. உலகை - ப்ரளயார்ணவமக்நமான லோகத்தை. கேழலொன்றாகி - அத்விதீயவராஹமாய்க்கொண்டு. இடந்த - இடந்தெடுத்த. கேசவன் - ப்ரளயஜலத்திலே நனைந்த மயிரழகையுடைய. என்னுடை யம்மான் - என் ஸ்வாமியாய க்ருஷ்ணனுடைய வ்ருத்தவரிதத்து வேழம் - ப்ரதிபந்தகமான குவலயாபீடத்தை. மருப்பைப் பொசித்தான் - ஸ்ருங்கபங்கம் பண்ணினவனாய். இவ்வுபகாரம் விண்ணவர்க்கு - அதிஶயிதஜ்ஞாநரான தேவர்களுக்கும். எண்ணல் - நினைக்க. அரியான் - அரியனாய். பின்னையு மாஶ்ரிதர்க்கு உதவுகைக்காக ஆழம் - அகாதமாய். நெடும் - பெருத்த. கடல் - க்ஷீரார்ணவத்திலே. சேர்ந்தானவன் - கண்வளர்ந்தருளினவன். என்னருகலிலான் - என்னருகான விடத்திலேயானான். அருகலிலென்று - ஏழாம்வேற்றுமை. . . . .*

ஈடு - இரண்டாம்பாட்டு.

என்பரிஸரத்திலே வர்த்தித்தவன், அதுஸாதமித்தவாறே யென்னருகே வந்து நின்றானென்கிறார்.

(சூழல்பலபலவல்லான்) இப்போது சூழலென்கிறது - அவதாரத்தை அவதாரத்தை "சூழல்" என்பானென்னென்னில்; சேதநரையகப்படுத்திக் கொள்ளுமதாகையாலே. ஜாதிபேதத்தையும், அவாந்தரபேதத்தையும்பற்ற (பலபலவென்கிறது) (வல்லான்) கர்மநிபந்தநமாகப்பிறக்கு மவனுக்கும் முடியாதபிறவிகளைப் பிறக்கவல்லான். கர்மம் செய்யவல்லதன்றிறே, அநுக்ரஹம்செய்யவல்லது. அவற்றிலே யொரு சூழல்சொல்லுகிறார். (தொல்லை) வாராஹகல்பத்தினுதியிலே. (அங்காலத்து) தன்வடிவைக்கண்ணுக்கிலக்காக்கின காலமிறே, அத்தைப்பற்ற - அங்காலமென்கிறார். (உலகை) ஒருதிருவடி திருவநந்தாழ்வானுக்காகத் தானிப்படிப்படப்பெற்றதோ', ஸங்கல்பத்துக்கும் பாத்தம்போராதபூமிக்காகக்கிடீர். (கேழலொன்றாகி) தன்மேன்மையோடணைந்திருப்பதொரு வடிவைத்தான் கொள்ளப்பெற்றதோ'. (ஒன்றாகி) பின்பு ஸர்வஶக்தியான தானே "இவ்வடிவைக்கொள்ள" என்னிலு மொண்ணாதபடியத்விதீயமா யிருக்கிறபடி. பூமி, ப்ரளயத்திலே யகப்பட்டவாறே, நீருக்கும்சேற்றுக்கு மிளையாதவடிவைக்கொண்டவித்தனையன்றான்; அது அவன்கொண்டவடிவாகையாலே அழிவுக்கிட்ட வடிவுதனக்கேயாலத்திவழிக்க வேண்டியிருக்கும்* பன்றியாமதேயிறே. (இடந்த) அந்

ஜாதிக்காகவுள்ளதொருகுண மாயிற்றுசசெருககு, ஸ்ரியஃபதியவ்வடிவைக் கொண்டாற் சொல்லவேண்டாவிறே. அண்டபித்தியிலேசோந்த பூமியை ப்புக்கெடுத்துக் கொணடேறினான். (கேசவன்)ப்ரஸஸ்தகேஸன். அப போதைத்திருமேனியு ரூனமயிருமாயநின்றதிலே. (என்னுடையம்மான்) ஸம்ஸாரபரளய ங்கொண்ட வெனனையெடுத்தவன். (வேழமருபபை யொசித்தான்) குவலயாபீடத்தினுடைய மருப்பையநாயா ஸேநமுரித்த வன். அப்படியேயென்னுடைய * மதக்களிறைந்திளையும் சேரிதிரியாமல் பண்ணினவன்.

விரோதிநிரஸநஸீலனென்றபடி. (விண்ணவாக்கெண்ணலரியான்) தனியேகுவலயாபீடத்தோடே பொருதவன் ப்ரஹ்மருத்ராதிகள மநோர தத்துக்கு மவ்வருகானவன் . (ஆழநெடுங்கடல்சேர்ந்தான்) அந்தப்ர ஹ்மாதிகள் கூக்குரல கேடகத்திருபபாற் கடலிலே சாயந்தருளினவன். ஆழம் - உறுத்தாமைககு. நெடுமை * தாளும் தோளும் முடிகளும் சமனிலா தபலபரப்பி வேண்டினபடி கண்வளாந்தருளுகைக்கு. (அவனென்னரு கலிலானே) அவர்களைபபோலேயெனககதூரவிப்ரக்ருஷ்டமாகவும் நிற் கிறிலன்..*

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு. (சூழலித்யாதி) " என்னருகலிலான " என்றதைக் கடாக்ஷித்தவதாரிகை (என்பரிஸரத்திலேயித்யாதி)

" சூழல் " என்கிறது - கீழ்போலேபரிஸரவாசியன்று, அவதாரவாசியெ ன்கிறார் (இபபோதித்யாதி) சேதநரைசசூழநதுகொளளுமது - சூழலென்றபடி. சூழ்ந்துகொள்ளுகை - வளைததுககொள்ளுகை. வீபஸைககுபாவம் (ஜாதிபேதே த்யாதி) அவாநதரபேதம் - ஏகஜாதியிலுளளபேதம். பலவுடையான எனறுதே, " வல்லான் " எனறதுககுபாவம (காமஙபநதநேதயாதி) காமவஸ்யனுககொழி ய, அகாமவஸ்யனுக கநேகஜநமஙகூடுமோவெனன (காமமசெயயவல்லதிதயாதி) அநுக்ரஹம் நிதயமாகையாலே பராாததமாகவநேகாவ தாரஙகளுண்டென்று க ருதது.

காலததுககழகேதெனன (தனவடிவையிதயாதி) பாததம் - தரம். " கேழல் " என்றதுககுபாவம் (தனமேன்மையோடிதயாதி) அணைநது - கூடி. " ஒன று " எனறதுககுபாவம் (பின்புஸாவஸகதிதயாதி) கொளளவென்னிலும - பரிகர ஹிக்கவேணுமெனறாலும். ஒணணுத - கூடாத. விஷாணம் (பூமிப்ரளயத்திலேயி த்யாதி) அழிவுககிட்டவடிவு - வப்யததுக்காக ஸம்பாதித்தவடிவு - அதாவது - ரா ஜாக்கள ஸவாாததமாக நல்லபதார்த்தங்களும் ஸமபாதியாநிற்கசசெய்தே, புறசசி லவுக்காகவும் சில ஸம்பாதிக்குமாபோலே, ஆஸ்ரிதருடைய வாபத்ரக்ஷணார்த்தமா ககொண்ட வடிவென்றபடி. ஆலததிவழிக்க - ஆலததியெடுக்க. அபபடியிருக்கு மோவென்ன, ப்ரமாணம் (பன்றியாமிதயாதி) நாய்ச்சியாாதிருமொழி. வராஹ

மானதேஜஸ்ஸையுடைய தேவனென்றபடி. எடுத்து என்றதே, “ இடந்து ” என்கிறது - செருக்கின கார்யமாகையாலே. அதனையருளிச்செய்கிறார் (அஜஜாதிக்காக வித்யாதி) (சொல்லவேண்டாவிறே) செருக்குக்கு என்று சேஷம். செருக்கு - காவம்.

உளைமயிர் - கேஸரங்கள். “ உலகையிடந்த கேசவனென்னுடையமமான் ” என்றுகூட்டிபாவம் (ஸம்ஸாரேத்யாதி)

“ வேழமருப்பையொசித்தானென்னுடையமமான் ” என்றுகூட்டிபாவம் (அப்படியேயித்யாதி) முதற்றிருவந்தாதி (மதக்களிறித்யாதி) ஶ்ரோத்ராதிகளாகிற மத்தகஜங்களைந்தையும் விஷயங்களாகிற குடியிருப்புகளிலே ஸஞ்சரியாதபடியாக வென்றபடி. பலிதம் (விரோதீத்யாதி)

“ விண்ணவர்க்கெண்ணலரியான் ” என்கிறபதத்தைக் கீழும்மேலுங்கூட்டி யோஜிப்பது. தனியே - அஸஹாயேந. விஶேஷணங்களுக்கு ப்ரயோஜநம (ஆழ மித்யாதி) நெடுமை - தைர்க்கயம். (தாளுமித்யாதி) ஒப்பில்லாதபல திருவடிகளையும் திருத்தோள்களையும திருமுடிகளையும் பரப்பியென்றபடி.

அவர்களைப்போலே - ப்ரஹ்மருத்ராதிகளுக்குப்போலே. அருகலிலான் - அருகானவிடத்திலேயானென. ஸமீபஸ்தனென்றபடி. அருகல் - அந்திகம். “ அருகலில ” என்று - ஸப்தமி.

க்ரமேணாநவய:. ……… …. … ………………………………………*

மூன்றாம் பாட்டு.

அருகலிலாயபெருஞ்சீரமரர்களாதிமுதலவன்
கருகியநீலநன்மேனிவண்ணன்செந்தாமரைக்கண்ணன்
பொருசிறைப்புள்ளுவந்தேறும்பூமகளார்தனிக்கேள்வ
னொருகதியின்சுவைதந்திட்டொழிவிலனென்னோடுடனே.

ஆறாயிரப்படி.

(அருகலில்) ஹேயப்ரத்யநீககல்யாணாநவதிகாஸங்க்யேய குண விஶிஷ்டனாய, அயர்வறுமமரர்களதிபதியாய், நிரதிஶயஸௌந்தர்யஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யபரிமிதகல்யாணகுண பரிபூர்ணனாய, பெரியதிருவடியை திவ்யவாஹநமாகவுடையனாய், ஶ்ரிய:பதியாயிருந்தவெம்பெருமானென்னருகேவந்து பின்னையொருபடியாலென்னோடு ஸம்ஶ்லேஷித்துவிட்டிலன்; ஸர்வப்ரகாரத்தாலும் ஸமஶ்லேஷியாநின்றானென்கிறார் ………………………………………………*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், என்னோடுகூடிநின்று பஹுமுகமாக ரஸிப்பியாநின்றானென் கிறார்.

அருகலில் - அபக்ஷயாதிதோஷரஹிதமாய. ஆய - ஸதாஸ்திதவத்தாலே நித்யமாய். பெரும - அபரிச்சிந்நமான. சீர் - குணங்களையுடையனாய். அமரர்கள் - நித்யஸூரிகளுக்கு. ஆதி - ஸத்தாதிஹேதுபூதனான. முதல்வன - ப்ரதாநனாய். கருகிய - மிகவுங்கருகின. நீலம் - நீலரத்நம்போலே. நல - நன்றான. மேனிவண்ணன - திருமேனிநிறத்தையுடையனாய. செம - அவ்வடிவுக்கு பரபாகமாம்படிசிவந்த. தாமரை - தாமரைபோன்ற. கண்ணன - திருக்கண்களையுடையனாய. பொரு - செறிந்த. சிறை - சிறகையுடையனான. புள - பெரியதிருவடியை. உவந்து - மிகவும்விரும்பி. ஏறும் - மேற்கொள்ளக்கடவனாய். பூமகளார - பூவிலமணம்வடிவுகொண்டாற்போலே போக்யபூதையான லக்ஷ்மிக்கு. தனிக்கேள்வன - அத்விதீயபோகதாவானவன. என்னோடுடனே - என்னோடுகூடிநின்று. ஒருகதியின - ஒருவழியாலுள்ள. சுவை - இனிமையை. தந்திடு - தந்து. ஒழிவிலன் - தவிருகிறிலன்.

ஹேயப்ரத்யநீகமாய ஸமஸ்தகல்யாணகுணாத்மகமான ஸ்வரூபவைலக்ஷண்யமும், நித்யஸூரிநிர்வாஹகத்வரூபமான மேன்மையும், விலக்ஷணவிக்ரஹயோகமும், புண்டரீகாக்ஷத்வமும், கருடவாஹநத்வமும், ஸ்ரிய:பதித்வமுமாகிற பரத்வசிஹ்நங்களாயுள்ள வற்றுசுவையுந்தாராநின்றானென்று கருத்து. அருகலென்று - குறையாய, க்ஷயமென்றபடி. .... *

ஈடு - மூன்றாம்பாட்டு.

திருவடி, திருவநந்தாழ்வான், பிராட்டிமார் தொடக்கமானாரோடு ஓரோவகையாலே பரிமாறுமவன், என்னளவிலோரோவகையில பரிமாறிவிடமாட்டுகிறிலனென்கிறார்.

அருகல் - குறைகை, கேடு. இல்லென்பது - இல்லாமை. குறைவின்றிக்கே, ஆய - ஆன. நன்றான. ஹேயப்ரத்யநீகமுமாய் கல்யாணைகதாநமுமான நிரவதிககுணங்களையுடையனுமாய, அக்குணங்களை நித்யஸூரிகளை ஸதாநுபவம்பண்ணுவிக்குமவனுமாய, அவர்கள ஸத்தாதிகள் தன்னதீநமாம்படியிருக்கிறவன. (கருகியநீலநன்மேனிவண்ணன) கறுத்து நெய்த்துப்பேசுக்கவிஷயமாம்படி விலக்ஷணமான திருமேனியில நிறத்தையுடையவன. விலக்ஷணமான திருமேனியில கறுத்துநெய்த்த நிறத்தையுடையவன். அவர்களை ஸதாநுபவம்பண்ணிவைக்கும்போது படிவிடும்படி. (செந்தாமரைக்கண்ணன) அகவாயில குணங்களுக்கு பரகாஸகங்களான திருக்கண்களையுடையவன. (பொருசிறைப்புள்ளுவந்தேறும) ஸர்வேஸ்வரன் பெரியதிருவடியை மேற்கொள்ளுவதாகநினைத்து "வா" என்றழைத்தால, அவனுடைய அங்கீகாரத்தாலுண்டான ஹர்ஷத்தாலே பெருக்காறுசுழித்தாற்போலே சுழித்துத் தன்னிற்றான்பொராநின்றுள்ள சிறகையுடையனாய்க்கொண்டாயிற்று தோற்றுவது. அவனும் "நாமிவனைமேற்கொள்ளப்பெற்றோமே" என்று திருவுள்ளத்தில் ப்ரீதியோடே யாயிற்று மேற்கொள்ளுவது. (பூமகளார்தனிக்கேள்வன்)

புஷ்பத்தில் பரிமளம் வடிவுகொண்டாற்போலே யிருப்பாளாய் போக்ய தைகவேஷையான பெரியபிராட்டியாகத் வல்லபனென்றால, இப்படிப் பட்ட வைஸ்வர்யத்துக்கு இரண்டாம்விரலுக்காளில்லாதபடியிருக்கிறவன். (ஒருகதியினித்யாதி) அவர்களோடு பரிமாறுமாபோலே யொருவழியால்வந்த ரஸத்தைத்தந்து விடுகிறிலன், என்னளவில நித்யஸூரிகளெல்லாரபக்கலிலுமபண்ணு மாதரத்தை யென்பக்கலிலே பண்ணுகின்றான். (உடனே) "இவனொருவிபூதிமான், அநயபரன்" என்றுதோற்றவிருக்கிறிலன. நித்யவிபூதியில் கேளவியுமிங்கேயிருந்தேயாமித்தனை. "தண்டாமமசெய்து" என்று - நித்யவிபூதியில பண்ணும்விருப்பத்தைப்பண்ணினானென்றார் கீழில திருவாய்மொழியில; இதில - அவ்விபூதியிலுள்ளாரோடு பரிமாறும்படியை யெனனொருவனோடு பரிமாறினானென்கிறார்........... ....*

ஜீயர் அரும்பதம்

மூன்றும்பாட்டு. (அருகலிலாயவித்யாதி) "பொருசிறைப்புள்ளுவந்தேறும்" இத்யாதிகளைக்கடாக்ஷித்தவதாரிகை (திருவடியித்யாதி) இவர்களைச்சொன்னது - திருவநந்தாழ்வானுக்குமுபலக்ஷணம.

கேடு என்றது - விவரணம. குறைவாலே - ஹேயத்தையைச்சொன்னபடி. "பெருஞ்சீர்" என்றதுக்காத்தம் (நிரவதிககுணங்களையென்று) "ஆதி" என்றதுக்காத்தம் (அகுணங்களையித்யாதி) ஆதியத்இத்யாதிः என்றுய, அமரர்களாலே குணவிஶிஷ்டதவேந ஸவீகரிக்கப்படுமவனென்றுய. அத்தாலே-ஸதாநுபாவ்யனென்றபடி. "முதலவன" என்றதுக்காத்தம் (ஸத்தாதிகளித்யாதி) ஆதிஶப்தத்தாலே - ஸத்திதிப்ரவருத்திகளைச்சொல்லுகிறது. ஸத்தாதிகளுக்குக் காரணபூதனென்றபடி.

"கருகிய, நீலம், நல" என்கிறமூன்றையும் நிறத்துக்கு விஶேஷணமாகவருளிச்செய்கிறார் (கறுத்தித்யாதி) நெய்த்து - ஸநிக்தமாய. நல் - விலக்ஷணமான. பேச்சுக்கவிஷயமாம்படி விலக்ஷணமானவென்றது - வைலக்ஷண்யாதிஶயத்தாலே, "இன்னபடி" என்றுசொல்லவொண்ணாதென்றபடி. "நல" என்றதைமேனிக்குவிஶேஷணமாக்கி யருளிச்செய்கிறார் (விலக்ஷணமானவித்யாதி) வண்ணம - நிறம். "அமரர்களாதிமுதல்வன கருகியநீல நன்மேனிவண்ணன" என்று கூட்டிபாவம (அவர்களையித்யாதி) படி - ஜீவநமும, திருமேனியும்.

"பொருசிறை, உவந்தேறும" என்றபதங்களுக்கு பாவம் (ஸர்வேஶ்வரனித்யாதி வாக்யத்வயமும) "பொருசிறை" என்கையாலே - திருவடியுடைய ஶக்திசொல்லுகிறது. "உவந்தேறும" என்கையாலே - ஈஶ்வரனுடைய உகப்புச்சொல்லுகிறது. மேற்கொள்ளுவதாக - ஆரோஹணார்த்தமாக. நாமாந்தரங்களைச் சொல்லாமல், "பூமகளார்" என்றதற்கு பாவம (புஷ்பத்திலித்யாதி)

அமரர்களாதிமுதல்வன "பொருசிறை" இத்யாதிகளைக்கூட்டிபாவம (அவர்களோடித்யாதி) கதி - வழி.

சுவை - ரஸம். அவதாரணார்த்தம் (இவனொருவிதயாதி) அவதாரணார்த்த சரமகாஷ்டாமாஹ (நிதயவிபூதியிலிதயாதி) பாட்டுக்கெல்லாந்தாதபாயம் (தண்டாமமிதயாதி)

அருகலிலாய இத்யாரப்ய, தனிக்கேள்வனென்னோடு ஒருகதியின சுவைதந்திட்டொழிவிலன இத்யந்வய:.. .... *

நான்காம்பாட்டு.

உடனமர்காதல்மகளிர்திருமகள்மண்மகளாயர்
மடமகளென்றிவர்மூவராளுமுலகமுமூன்றே
உடனவையொக்கவிழுங்கியாலிலைசேர்ந்தவனெம்மான்
கடன்மலிமாயப்பெருமான்கண்ணனென்னொக்கலையானே.

ஆறாயிரப்படி.

(உடனமா) இனிமேலவன கலந்தருளின க்ரமத்தைச்சொல்லுகிறார்.

பெரியபிராட்டியாரும் ஸ்ரீபூமிப்பிராட்டியும் நப்பின்னைப்பிராட்டியுமவனுக்கு திவ்யமஹிஷிகள்; ப்ருதிவ்யந்தரிக்ஷாதி ஸாவலோகங்களுமவனுக்கு லீலோபகரணம் ; இந்தலோகங்களினுடைய ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாராதிகளவனுக்குலீலை, இன்னமஅபாயந்தமாய ஆஶ்சர்யமான கல்யாணகுணங்களை யுடையனாயிருந்த கண்ணன யசோதைப பிராட்டியொக்கலையிலே யிருந்தருளுமாபோலே, என்னுடையவொக்கலையிலே யேறியருளினா னென்கிறா.......................... ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், பூர்ணனாய ஸர்வரக்ஷகனானவன என்மருங்கிலே யிரானினறு னென்கிறார்.

உடன் - கூடியிருநது. அமா-தரிக்குமபடியான காதல - காதலையுடைய. மகளிர் - பிராட்டிமார். திருமகள்-அதிஶயிதஸம்பதரூபையானலக்ஷ்மி. மண்மகள-க்ஷமாதததவமானபூமி. ஆயா மடமகள-அநுரூபமானஆபிஜாதயந்தனையும, ஆதமகுணததையுமுடையநப்பினனை. என்று - என்றுபரதாநதயாபரஸிததைகளான. இவர் - இவாகள. மூவர் - மூவா. ஆளும் - ரக்ஷணீயமான. உலகமும் - ஜகததும். மூன்றே-ஸவாககலோகபர்யநதமானகருதகலோகமும், ஜாஸதபஸஸதயரூபமான அகருதகலோகமும், மஹாலோகமாகிற கருதகாகருதகலோகமுமாகிற மூன்றுயிருககும். ப்ரளயகாலததிலே அவை - அவறறை. உடன் - தாரதம்யவிபாகரஹிதமாக. ஒக்க - ஏகோத்யோகததிலே. விழுங்கி - விழுஙகி. ஆலிலை - ஆலிலையிலே. சேர்நதவன - கண்வளாநது. எம்மான-இவ்வபதாநததாலேயெனனை யடிமைகொண்டஸ்வாமியாய. கடல் - க்ஷீரார்ணவததிலே. மலி - கணவளருமபிவருததியையுடையனாய். மாயம் - ஆஶ்சர்யகுணசேஷ்டிதஙகளாலே. பெருமான-அநவதிகஸவ

பாவனுன. கண்ணன - க்ருஷ்ணனுனவன. என்னெஞ்சகலேயான் - யஶோதைபக்கல போலேயென்னெஞ்சகலேயிலேயானுன்.

கடலினமிருந்தமாயமென்றுமாம.. .... ×

ஈடு - நான்காம் பாட்டு.

மேன்மையது, அகடிதகடநாஸாமாத்தயமது, இப்படி யிருக்கிறவன், யஶோதைபிராட்டி மருங்கிலே யிருக்குமாபோலே யென்மருங்கிலேவந்திருக்கை தனக்குப் பெறுபேறுக நினைத்திராநின்றுனென்கிறுர்.

(உடனமாகாதல்மகளிர்) உடனே யமரவேண்டுமபடியான காதலையுடைய பிராட்டிமார். "அகலகில்லேனிறையும" என்றுயிறறிவாகளிருப்பது. அவர்களாரொன்னில (திருமகள) ஸர்வேஶ்வரனுக்கு ப்ரதாநமஹிஷியாய்ப் பட்டத்துக்குரியளாய் "நகஸ்ஶ்ரீஞாவபாயஂஶ்ரீ" (நகஸ்ஸிந்நாபராத்யதி) எனறிருக்கும் பெரிய பிராட்டியார. (மண்மகள்) முதலிலே "குற்றம்பாரக்கக்கடவதோ" என்று அவனுக்குப்பொறைக்குவாத்தாய்ப பொறைவிளையும்படியான ஸ்ரீபூமிபிராட்டி. (ஆயர்மடமகள) அநுபவஸுகம் தானுய, தனவடிவழகாலே துவக்கித்திருவுள்ளத்தில் குற்றம்படாதபடி யிருக்கும நப்பின்னைப் பிராட்டி. திருமகள் - அவனைஶ்வர்யம. மண்மகள - அது விளையும்பூமி. ஆயர்மடமகள் - அத்தைபுஜிக்கிற போகதாவானவளென்றுமாம.

(இவாமூவா) மேன்மைக்கும புருஷகாரத்துக்கும் தனித் தனியே அமைந்திருக்கிற இவர்கள்மூவர். (ஆளுமுலகமுமூன்றே) அவர்களுடைய படுக்கைப்பற்றிருக்கிறபடி..த்ரிவிதசேதநரையுஞ்சொல்லுதல் ; கீழும், மேலும், நடுவுமான லோகங்களைசசொலலுதல.

(உடனவையொக்கவிழுங்கி) அவற்றிலொன்றும் பிரிகதிரப படாதபடி ஏககாலத்திலே தன்திருவயிற்றிலே வைத்து. விபூதித்வயமும் ரக்ஷ்யவாக்குமெனறுல, திருவயிற்றிலே வைக்குமது - ப்ரளயத்துக்கு கர்ப்பிக்குமெல்லேயிலேயாகிறது. (ஆலிலேசோந்தவன்) ஸகலலோகங்களையும் வயிற்றிலேவைத்து ஒருபவனுன ஆலந்தளிரிலே சாயந்தருளினவன். அகடிதகடநாஸாமாத்த்யத்தையுடையவன். (எமமான) அசசெயலாலே யென்னையெழுதிக்கொண்டவன். பதாாலமபநமபண்ணிக்கிடீ! ரடிமைகொண்டது. கீழிலகடிதகடநா ஸாமர்த்தயத்துக்குமேலே ஒருஅகடிதகடநாஸாமாத்த்யமாயிறறிது. "நநமேயம" (நநமேயம்) எனறிருந்தவெனனை அநந்யாாஹமாக்கினபடி. (கடலிதயாதி) திருப்பாற்கடலிலே குறைவறவந்து வர்த்திப்பானுய், ஆஶ்சர்யமான சேஷ்டிதஙகளையுடைய ஸர்வேஶ்வரன். அனறிக்கே, கடலிற்காட்டில்மிக்க ஆஶ்சாயததையுடைய ஸர்வேஶ்வரனென்றுமாம்.

(கண்ணன்) அந்தவாஸ்சாயங்களெல்லாம் தன்பக்கலிலே காணலாம்படி யிருக்கிற க்ருஷ்ணன். (என்னொக்கலையானே) யசோதைப்பிராட்டி மருங்கிலேயிருக்குமாபோலே யென் மருங்கிலே யிராநின்றான...*

ஜீயர் அரும்பதம்.

நான்காம்பாட்டு. (உடனமரிதயாதி) "உடனமர" இதயாரபய, "ஆவிலை சேர்ந்தவனென்னொக்கலையான" எனகிறபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை (மேனமையதித்யாதி) "ஒக்கலையானே" என்ற ஏகாரததைபபற்ற (தனக்குபபெரும்பேருகவித்யாதி) பெரும்பேருக - அலபயலாபமாக.

அமரவேண்டுமெபடியான - க்ஷணமும்பிரியாதே ஸம்ஸ்லேஷிக்கவேண்டும்படியான. மகளிர - பிராட்டிமார். புருஷகாரத்துக்குடலாக பாவம் (ஸர்வேஸ்வரனுக்கிதயாதி) உவாத்தாய - உபாதயாயையாய.

மேன்மைக்குடலாக தாதபர்யாநதரம் (அவனைஸ்வாயமிதயாதி) இந்த யோஜநாதவயததாலும - பூர்வோததரவாக்யாரததம் ஸூசிதம்.

படுக்கைபபற்று - ஸ்ரீ களுடையஸீமை. மூநதினயோஜனையில், லோகமபதம் - சேதனவாசி. இததால - விபூதித்வயததையுஞ்சொல்லுகிறது. (கீழுமமேலும் நடுவுமானவிதயாதி) கிழாவது - "ஹெதெரொகஜெகஷு தகம்" (தரைலோக்யமேதத்க்ருதகம்) என்கிறபடியே க்ருதகமானதரைலோகயம். அதாவது - பாதாளலோகஙகளோடேகூட பூமியுமாகவொனறும, புவர்லோகமும, ஸுவர்லோகமு மாகததரைலோக்யமும. மேலாவது - "ஜநஸ்தபஸ்ஸதயம்" (ஜநஸ்தபஸ்ஸதயம்) என்கிறமூனறுலோகமும். இநதமூனறும - அக்ருதகம். நடுவாவது - "க்ருதகாக்ருதகொ லொகொ மஹா லோகஇதிஸ்ம்ருதஃ" (க்ருதகாக்ருதகோலோகோமஹாலோகஇதிஸ்ம்ருதஃ) எனகிறமஹாலோகம. ஆக, க்ருதகம், அக்ருதகம, க்ருதகாக்ருதகம், என்கிறமூனறுலோகததையுஞ சொல்லுகிறதெனறபடி.

"உடனவையொக்கவிழுங்கி" என்றது - அவாநதரபரளயவிஷயம். "அவை, உடன, ஒக்க, விழுங்கி" எனகிறபதத்ரயததுக்கும் க்ரமேணாததம் (அவற்றிலொனறுமிதயாதி) உடன் - காரத்ஸ்ந்யபரம். ஒக்க - காலபரம். பிறிகதிரபபடாதபடி - கதிர்பிறியாதபடி. ஒன்றுநதப்பாதபடியித்யர்த்தஃ. "உலகமூனறு" என்று - த்ரிவிதசேதநரையுஞசொன்னபக்ஷததில், "ஐகஞஜநஸ்ரீகஷ ஸரஸஃ ஸர்வெ ஸஹநாராயணெநஸஹ" (இதமஜ்ஞநமபாஸ்ரித்யமமஸாதாமயமாகதாஃ। ஸர்கேபிநோபஜாயநதே பரளயேநவயததிச) எனறுநித்யமுக்தரை - "அவை" என்று - தச்சப்ததாலே பராமர்சிக்குமபோது, அவர்களையும் விழுங்கக்கூடுமோவென்ன (விபூதிதவயமுமிதயாதி) (பரளயத்துக்குகாமீபவிக்குமெல்லையிலேயாகிறது) பததாதமவிஷயமெனறபடி. "ஸர்வம்ஹலவிதம்ப்ரஹ்மதஜ்ஜலாநிதி" (ஸர்வம்கலவிதம்ப்ரஹ்மதஜ்ஜலாநிதி) என்கிறவிடததிலே, 'தஜ்ஜதவதல்லதவங்களைச் சொல்லும்போதுதச்சப்தம் - ஸூக்ஷ்மசிதசிதவிசிஷ்டப்ரஹ்மத்தைச்சொல்லுகிறது ததநதவததைச் சொல்லும்போதுதச்சப்தம் ஸ்தூலருபேண ஆகவேணும எனகிற ஔசித்யத்தைப

பற்ற, தச்சப்தம் - நிஷ்க்ருஷ்ட ப்ரஹ்மத்தைப்பராமர்சிக்கிறது' என்றுருக்தி ஸ்ருதப்ரகாசிகாகாரர் வ்யாக்யாநம்பண்ணினாற்போலே,' இங்கும, சாமீபவிக்கு மெல்லையிலே யொதுக்குகிறார்" என்று ஸம்ப்ரதாயம், (பவனன) பவந்தி - பவ:. என்றுய, உத்பவியாநிற்கிறவென்றபடி., தளிர் - பல்லவம். பலிதம (ஆகடிதேத் யாதி)

பத்ராலம்பநமாவது - ஆலிலையையவலம்பிக்கை, ஸ்வபாவார்த்தம். ஆவணை வோலை, சாடுவுக்கார்த்தம. அடிமையோலையென்றபடி. "எம்மான்" என்றதுக்கு டாவாந்தரம (கீழ்லகடிதேதயாதி) விவரணம் (நமேயமிதயாதி)

கடல்மலி - கடலிலேவர்த்திக்கிறவென்னுதல், கடலிற்காட்டில் மிக்கவென்னுதல. மலிதல - வர்த்திக்கையும், மிகுதியும. யசோதைப்பிராட்டி மருங்கிலேயென்றது - "கண்ணன" என்றதைப்பற்ற.

ஈரமேனுநவய:. .. .."

ஐந்தாம்பாட்டு.

ஒக்கலைவைத்துமுலைப்பாலுண்ணென்றுதந்திடவாங்கிச்
செக்கஞ்செக்கவன்றவள்பாலுயிர்செக்கவுண்டபெருமான்
நக்கபிரானோடயனுமிந்திரனும்முதலாக
வொக்கவுந்தோற்றியவீசன்மாயனென்னெஞ்சினுளானே.

ஆறாயிரப்படி

(ஒக்கலை) ப்ரஹ்மாதிஸ்தாவராந்தமான ஸர்வஜகத்துக்கும்ஸ்ரஷ்டாவாய, ஸர்வஜகந்நியந்தாவாய், ஆஸ்சர்யபூதனுமாய, விரோதிநிரஸநஸ்வபாவனுமா யிருந்தவன், என்னொக்கலையிலே தானிருந்தவிருப்பு எனக்குஸாத்மித்தவாறே, என்மார்விலே வந்திருந்தருளினானென்கிறார்.*

பன்னீராயிரப்படி.

அநந்தரம, ஸர்வாதிகனாய விரோதிநிவர்த்தகனான க்ருஷ்ணன், என்ஹ்ருதய ப்ரதேசத்திலே யடங்கியிருந்தானென்கிறார்.

நக்கபிரானோடு-திகம்பரனாய ஈஸ்வரனாகப்ரஸித்தனான ருத்ரனும் அயனும்- யோநிஜந்மமில்லாமையாலே அஜனென்று ப்ரஸித்தனான ப்ரஹ்மாவும். இந்திரனும்- பரமைஸ்வர்யவிசிஷ்டனாகப்பாவித்திருக்கிற இந்த்ரனும். முதலாகவும் - முதலான ஸமஸ்தபதார்த்தங்களையும. ஒக்க - ஏகோதயோகேந. தோற்றிய - உத்பாதித்த. ஈசன் - ஸர்வேஸ்வரனாயவைத்து. அவதாரதசையிலே ஒக்கலைவைத்து - யசோதையைப்போலேயெடுத்துவைத்து ப்ரேமபாவனையாலே. முலைப்பாலுண்ணென்று - முலைப்பாலையுண்ணென்று. தந்திட - ஸத்வரமாகத்தர. வாங்கி - அத்தையஸங்கிதமாகஸ்வீகரித்து. செக்கம் - அந்தபூதனையானவள் "முடிக்கவேணும்" என்றுவந்தநினைவு. செக - அவளதன்னோடேமுடியும்படி. அன்று - அவள்நலிவதாகவந்தவன்று. அவள்பால் - அவளிடத்து. உயிர் - ப்ராணனை. செக - முடியும்படி. உண்ட- அவள்தந்தபாலையமுதுசெய்து. பெருமான் - ஜகத்துக்கீஸ்வரனையுண்டாக்கினஸர்

வாதிகனான. மாயன் - ஆஶ்சர்யபூதன். என - எனனுடையஅவயவைகதேஶமான-நெஞ்சிலுள்ளான - ஹ்ருதயபரதேஶதநுகருள்ளேயடங்கினன்.

செககம - செருகதல. முடிதல்.... ....

௩ ரு - ஐந்தாம்பாட்டு.

விரோதி நிரஸநஶீலனுய ஸர்வ ஸ்ரஷ்டாவானவன் வந்தென்னுடைய ஹ்ருதயஸ்த்தனானனென்கிருர.

(ஒக்கலைவைதது) பரிவுடைய யஶோதைப் பிராட்டியைப்போலே தூககியெடுத்து மருங்கிலேவைதது. (முலைப்பாலுண்ணென்று) முலைககண்ணெறித்து கலேஶப்படாதினறேன், உண் என்றுறுககிககொடுகக. (தநதிட) “ ஷஹ்ரீநுஹஜ—ம ” (அஸ்மாந்ஹந்தும) என்னுமாபோலே, அந்நஞுசு தமககுக்கொடுத்தாறபோலே யிருக்கையாலே “தநதிட” என்கிருராதல ; தருகை - கொடுக்கையாய வழங்குகையாலே, “ தநதிட ” என்கிருராதல. (வாஙகி) அவள முலைகொடாவிடில் தரியாதாளாய்க்கொடுத்தாற்போலே, இவனும் முலையுண்ணுவிடில தரியாதானுயுண்டபடி. (செக்கஞுசெக) செககம என்று - மரணமாய், அவ்ளகோலினமரணமவள் தனனுடே போமபடியெனனுதல். அன்றிககே, செககமென்று - சிவபபாய், அத்தால - நினைககிறது - சீற்றததையாய், அவள் சீறினசீற்றமவள் தன்பககலிலே பலிக்கும்படியென்னுதல. “ இலங்கை செந்தீயுண்ணசசிவந்து” என்று-சிவபபைசசீற்றமாகபரயோகிததிறே.

அன்றியே, செககஞுசெக எனறது - செக்கசசிவககவென்றுய, முலைகொடுதத உபகாரஸ்ம்ருதியாலே திருவதரத்தில் பழுப்புததோற்ற ஸ்மிதம்பண்ணினபடியாதல. (அன்று) ஜகதுபஸம்ஹாரம்பிறககப்புககவன்று. தனியிடத்திலே யிவள் நலியவநதவன்று. (அவள்பாலுயிர்) அவள்பாலெனறது - அவளிடத்தெனறபடி. அவளுடைய ஹேயஶரீரததைப்பற்றிநிறகிறவுயிர. (செக) முடியுமபடி. அன்றிககே அவள்பாலையும் உயிரையும் முடியுமபடி எனறுமாம. “ முலையூடுயிரைவற்ற வாஙகியுண்டவாயான் ” என்னக்கடவதிறே.

முலையாலநினைககிறது - பாலையிறே அஙகு. முலையுண்டான் என்றால் - முலைப்பாலுண்டா னென்றபடியிறே. (உண்டபெருமான்) அவள்முலையுண்டு அவளை முடித்து, ஜகத்துககொரு ஶேஷியைத்தந்தவன் ; “ ஸ்தநந்தவிஷஸம்மிஶ்ரம்ரஸ்யமாஸீஜ்ஜகதகுரோ: ” (ஸ்தநம்பநதத்விஷஸம்மிஶ்ரம்ரஸ்யமாஸீஜ்ஜகதகுரோ:) என்கிறபடியே. (நக்கபிரானித்யாதி) ஸ்வகோஷ்ட்டிக குபகாரகனுக ப்ரஸித்தனு யிருககிற ருத்ரனோடேகூட, அவனுககும் ஜநகனான சதுர்முகனும், அவனுக்கு மிவ்வருகான இந்த்ரனுந் தொடக்கமாக இவ்வருகுள்ளாரெல்லாரையும், அத்திக்காயி

லறுமான்போலே யொன்றாக வரும்பிக்கும்படி பண்ணின ஸர்வேஶ்வரன். (மாயன்) ஸ்ருஷ்டமான ஜகத்திலே அநுப்ரவேஶம முதலான ஆஶ்சர்யத்தையுடையவன். (ஸர்வஶரீரியாயிருக்கிற ஸர்வேஶ்வரன்) (என்னெஞ்சினுளானே) என்ஶரீரத்தி லேகதேஶத்தைப்பற்றிநின்றான்....*

ஜீயர் அரும்பதம்

ஐந்தாம்பாட்டு. (ஒக்கலையித்யாதி) " உயிர்செகவுண்டபெருமான், ஒக்கவுந்தோற்றியவீசன், என்னெஞ்சினுளானே " என்கிறபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை (விரோதித்யாதி)

" ஒக்கலைவைத்து " என்றுவிஶேஷித்ததுக்குபாவம் (பரிவுடையவித்யாதி) முலைகொடுத்ததென்றதே, " முலைபாலுண " என்றுவிஶேஷித்ததுக்குபாவம் (முலைக்கண்ணித்யாதி) உறுக்கி - அதட்டி. கொடுத்ததென்றதே, " தந்திட " என்கிறதென்னென்ன (அனுமாநஹுநத்யாதி) யுத்தகாண்டே ஸபத்தமே, "ஏஷ ஸர்வாயுதோபேத: ஸர்வரக்ஷோகண: ப்ரபு: । ராக்ஷஸேந்த்ரோ ராமஹந்தும்......" (ஏஷஸர்வாயுதோபேதஶ்சதுர் பரிஸ்ஸஹராக்ஷஸை: । ராக்ஷஸோபயேதிபஶ்யதவமஸமாநஹந்தும்நஸம்ஶய:.) ராமம்ஹந்தும் என்னவேண்டும்ஸ்தாநத்திலே, அவனைஹிம்ஸிக்கை-தங்களை ஹிம்ஸிக்கிறதாகநினைத்து, " ஹநிஷ்யந்தி " (அஸமாநஹந்தும்) என்றுசொன்னாற்போலேயென்றபடி. அநஞ்சு - அவனுக்குக்கொடுத்தநஞ்சு. வழக்குகையாலே - ப்ரயோகமுண்டாகையாலே. தந்திடவுண்ட என்னவமைந்திருக்க, " வாங்கி". என்றதுக்குபாவம் (அவளித்யாதி) ஆதராதிஶயந்தோற்றுகிறதென்றபடி.

முந்தினஆத்தத்வயத்துக்கும், செக-போகவென்றபடி. மூன்றாமர்த்தத்துக்கு, " செக்கம் " என்றும், " செக " என்றும் - சிவப்பாய், மிகவும்சிவக்கவென்றபடி, திருமொழி (இலங்கையித்யாதி) லங்கைதக்தமாம்படிகோபித்தென்றபடி. (சிவப்பையித்யாதி) சிவப்புக்குவாசகமானஶப்தத்தை சீறுததுக்கு பரதிபாதகமாக ப்ரயோகித்ததிறேயென்றபடி. [மழலைமென்னகை யிடையிடையருளாவாயிலேமுலையிருக்கவென்முகத்தே [வாயிலேமுலையிருக்கச்செய்தே, முலைசுருக்கும்படியாக வென்முகத்திலே நடுவேநடுவே மழலைசசிரிப்பாகச்சிரித்துக்கொண்டென்றபடி. பழுப்பு-சிவப்பு. " அன்று " என்றதுக்கு தாத்பர்யஸித்தார்த்தம் (ஜகதித்யாதி) ஶப்தஸித்தார்த்தம் (தனியிடத்திலித்யாதி) பாலையுமுயிரையுமொக்க வுண்டதுக்கு ப்ரமாணம் (முலையூடித்யாதி) திருமொழி. பூதனையுடைய முலைவழியே ப்ராணனும் பாலோடொக்கவறறும்படியாக வாங்கிபுஜித்தவாயை யுடையவனென்கை. " அவள்பால் " என்றதுக்கு - " முலையூடு " என்றது - ப்ரமாணமோவென்ன (முலையாலித்யாதி) உக்தார்த்தத்துக்கு லௌகிக ப்ரயோகமுண்டென்கிறார் (முலையுண்டானித்யாதி) " உண்ட " என்றவநந்தரம் " பெருமான் " என்றதுக்குபாவம் (அவளமுலையிலித்யாதி) உக்தார்த்தேஸம்மதிமாஹ (ஸ்தநயமித்யாதி) " ரஸ்யமாஸீத் " (ரஸ்யமாஸீத்) என்றவநந்தரம், " ஜகத்குரோ: " (ஜகத்குரோ:) என்கையாலே - விரோதியைப்போக்கி, ஜகத்துக்கு ஶேஷியைத்தந்தானென்றுபாவம்.

நக்கன் - நககஃ. அததிககாயிலறுமான - அததிக்காயிறகொசுகு. ஒன்றுக- ஏககாலததிலே. தோறறிய - தோறறுவிதத. ஒருகாலே ஸ்ருஷ்டித்தவென்றபடி. அருமபிக்கும்படி-தளிர்வெடிக்கும்படி.

ஸ்ருஷ்டிபரஸக்தமாகையாலே, தத்ஸமபிவ்யாஹ்ருதமான அநுப்ரவேஶ்ய ஞுகிகரணாதிகளை மாயாஸ்பதார்த்தமாக வருளிச்செய்கிறார். (ஸ்ருஷ்டமானவிதயாதி) "மாயனென்னெஞ்சினுள்ளான" என்றுகூட்டி (என்ஶரீரத்திலேகதேஶத்தையென்றது) மாயன்-ஸர்வஶரீரி. ஏகதேஶத்தைப்பற்றியென்றது-என்மாலை பற்றியென்னுதல், அவதாரிகைக்குச்சேர, ஹ்ருதயத்தைப்பற்றியென்னுதல. "நெஞ்சிடந்தான".என்னக்கடவதிறே. இதுசதுர்விம்ஶதஸஹஸ்ரத்திலேஸ்பஷ்டம.

ஆறாம்பா

மாயனென்னெஞ்சினுள்ளான்மற்றும்யவர்க்குமதுவே
காயமுஞ்சீவனுந்தானேகாலுமெரியுமவனே
சேயனணியன்யவர்க்குஞ்சிந்தைக்குங்கோசரமல்லன்
றூயன்றுயக்கன்மயக்கனென்னுடைத்தோளிணையானே.

ஆறாயிரப்படி.

(மாயன்) தேவாதிசரீராதிகளுக்கும் தத்தந்தர்வர்த்திகளான ஜீவர்களுக்கும் ப்ருதிவ்யாதிபூதங்களுக்கு மாதமாவாய, ஆஶ்ரிதஸுலபனாய நாஶ்ரிதருக்குபூமியாய், அபூமியாமிடத்து அவர்களைத்தனையேனு முதகருஷ்டரோயாகிலுமவர்கள மநஸ்ஸுக்குங்கூட அபூமியாயிருந்தவன்றான்னமாவிலே யெழுந்தருளி யிருந்தவிருப்பு ஸாத்மித்தவாறே, ஸமஸ்லேஷைகப்ரயோஜநனாய தன்னுடையகுணங்களாலும செயல்களாலுமென்னை நைவித்து என்னையறிவழித்துக்கொண்டு பெரியதிருவடிதிருத்தோளிலே யிருந்தருளுமாபோலே யென்னுடையதோளிலே யேறியிருந்தருளினான்; இப்படிமற்றுமாரேனு மொருவருக்குச்செய்தருளினானோ', இவனுக்கெனபக்கலுள்ள அபிநிவேஶமிருக்கும்படியே ! ஈதென்கிறார். ...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அநுகூலர்க்கெளியனாய் பரதிகூலாக்கரியனானவன 'என்னுடை

என - என்னுடைய. நெஞ்சினுள்ளான - நெஞ்சிலேவர்த்திக்கிற. மாயன் - ஆஶ்சர்யபூதனானவன். மறறும்யவர்க்கும் - மற்றுமெல்லாக்கும். அதுவே - அப்படிசெய்யுமோ. இப்படி யென்னளவிலே யெளியனாய, ஸாவாதமபூதனாய்க்கொண்டு. காயமும்-சரீரமும். சீவனும் - ஆத்மாவும். தானே - தானென்னலாம்படி தனக்கு ப்ரகாரமாகவுடையனாய. காலும் - வாயுவும். எரியும் - அக்நியும். அவனே-அப்படிதனக்குப்ரகாரமாய். சேயன் - இந்நிலை அநாஶ்ரிதர்க்கத்தியவொண்ணாதபடிதூ

ரஸதத்னுய. அணியன் - ஆஶ்ரிதாக்கறியலாம்படி ஆஸந்நனுய். யவர்க்கும் - எதத னையேனுமதிகர்க்கும். ஸ்வயத்நத்தாறகாணுமளவில் சிந்தைக்கும் - நினைக்கவும். கோசரமல்லன - விஷயமல்லாதவனுய். தூயன - ஆஶ்ரிதாக்கணியனுகைக்கடோன பரிசுத்தியையுடையனுய். துயக்கன்மயக்கன். அநாஶ்ரிதாக்கு தூரஸ்தனுமபடி ஸம்ஶயவிபர்யயஜ்ஞாந ஜநகனுனவன. பெரியதிருவடியை மேறகொள்ளுமாபோலே. என்னுடை - என்னுடைய. தோளிணையான - இரண்டுதோளிலுமிராநின்றன.

மற்றும் யவாககும் அதுவேயென்றநவயமுமாம. துயக்கு - விபரீதஜ்ஞாநம். மயக்கு-ஸம்ஶயஜ்ஞாநம.. ... .*

ஈ டு - ஆ று ம் பா ட் டு.

ஸர்வாந்தராத்மாவானவன என்தோளைப்பற்றி வர்த்தியாநின்றுனெனகிறுர்.

(மாயனென்னெஞ்சினுள்ளான்) இதென்னபெறுபபேறு, ஆஶ்சர்யமான குணசேஷ்டிதங்களையுடையவன் என்னுடைய ஹ்ருதயஸ்தனுனன். இதென்னசேராசசேர்த்தி. (மற்றுமயவாககுமதுவே) மற்றுமாரேனும நான்பெற்றபேறு பெற்றுருண்டோ.

நீர பெற்றபேறுதானென்னெனில (காயமித்யாதி) இதுவென்கிறுரமேல்.

(காயமும்சீவனுநதானே) தேவமநுஷ்யாதி ஶரீரங்களும அவ்வஶரீரஸ்த்த மான ஆத்மாககளும் அவனிட்டவழககு. (காலுமெரியுமவனே) காற்றும், தேஜஸ்த்தத்வமும, இரண்டும் - அஞ்சுககுமுபலக்ஷணமாய, பூதபஞ்சகமு மவனிட்டவழகக (சேயன்) ஸ்வயத்நத்தாலே காண்பாாககு தூரஸ்த்தனுயிருககும். (அணியன்) அவனுலேயவனைக் காண்பாாககுக கைப்புகுந்தணியனுயிருக்கும, (யவாககுமசிந்தைககும் கோசரமலலன்) தூரஸ்த்தனும்படிக்கெல்லை சொலலுகிறது. எததனையேனு மதிஶயிதஜ்ஞாநரா யிருககுமவர்களுககும கண்ணுககுவிஷயமாகாமையேயன்றிககே, மநோரதத்துக்குமவிஷயமாயிருககும. (தூயன) இப்படியிருககிறவன் யஶோதாதிகளுக்கு "யஜிஶசக்ஷுஷி" (யதிஶகநோஷி) எனனலாம்படியிருககும்.

(துயக்கனமயககன) உகவாதாாக்குஸம்ஶய விபர்யயங்களைப்பிறப்பிககும். (துயககனமயக்கன்) துயககு - மனநதிரிவு. " அருவினையேன " என்றகனற எனமநஸ்ஸைததிரியவிட்டு; " உனறேனேமலருந்திருப்பாதனுசேருமாறு " என்னுமபடி. திரியவிட்டென்னுடனேகலநதவன. மயககம் - கலத்தலும், கூடலும, (என்னுடைததோளிணையானே) என்னளவிலன்றிக்கே, திருவடிதிருத்தோளிலே யிருககுமாபோலே யிராநின்றுன். ....*

ஜீயர் அரும்பதம்

ஆரும்பாட்டு. (மாயனித்யாதி) "காயமும் சீவனுந்தானே, என்னுடைத் தோளிணையானே" என்றபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை (ஸாவாந்தராத்மேத்யாதி)

பூர்வோத்தரகாதாநாமாதிஷ்யநுவாதாதர்ஸநாதத்ராநுவாதத்தாஸநாத், அஸக்ருதுக்தோராதராதிஸ்யகாரயதவாசசாநுபாஷணஸ்யபாவமாஹ (இதென்னபேறுப்பேறிதி) "அநேநைவவாக்யேந, 'மற்றும்யவாக்குமதுவே' இத்யேதத்-பூர்வதர, 'தோளிணையான்' இத்யுத்தரத்ரசஸம்பத்யதஇதிஸூச்யதே" இதிவதந்தி. "மாயன், என" இதிபதத்வயம் ஹ்ருதிகிதாயாஹ (ஆப்சாயமானவிதி) (இதென்ன பெரும்பேறு) புநருக்திதாதபர்யம். (இதென்னசேராச்சேர்த்தி) என்னின்தாதபர்யம். பெருப்பேறுன்மைக்குப்பாதகம (மற்றுமாரோனுமென்று) அஃதுமற்றும்யவாக்குமே - யவாக்குமோவென்றபடி.

என்னென்னில் - இனியென்னென்னிலென்றபடி. (இதுஇதி) அநேந-"என்னுடைத்தோளிணையான" இத்யேதத்பராம்ருஶ்யதே. மேலென்றது - "தோளிணையான" என்றதைப்பற்ற.

"காயமும்சீவனும" என்று - ஜாதயேகவசநமாக வருளிச்செய்கிறார் (தேவமநுஷ்யேத்யாதி) இவ்விரண்டுமாதரமேயோ? தத்தீநமென்ன (இரண்டுமித்யாதி)

"சேயன" என்றதின சரமாவதி (யவர்க்குமித்யாதி) "யவாக்கும்" என்றசம்பதாரத்தம் (எத்தனையேனுமித்யாதி) "சிந்தைக்குமகோசரமல்லன" என்கிறசம்பந்தாரத்தம் (கண்ணுக்குவிஷயமாகாமையேயன்றிக்கேயென்றது) தூயன்-பரத்வசந்தராஹித்தன். நிஷ்க்ருஷ்டஸௌலப்யகுணஸஹிதஇத்யாத்த꞉. (இப்படியிருக்கிறவன) "தூயன" என்று-"அணியன" என்றதுக்கெல்லையைச்சொல்லுகிறதென்றபடி. "உகவாதார்க்கு ஸமஸ்யவிபாயங்களைப்பிறப்பிக்கும்" என்கிறவிடத்திலே, ஓரைதிஹ்யமருளிச்செய்வா - பட்டாதிருவோலக்கத்துக்குப்பலகாலும் ஸாஸதரியாயிருப்பானொரு ப்ராஹ்மணன் சென்றுடியிருப்பானுய, அவனைக்கண்டாலபட்டரும "வந்தாயோ போனாயோ" என்று ஸாமாந்யேந வ்யவஹரித்தருளிச்செய்வர்? ஒருஸ்ரீவைஷ்ணவா பலகாலும ஸேவிக்க எழுந்தருளுவா, அவரைக்கண்டால மிகவும க்ருபைபண்ணி யாதரித்துக்கொண டெழுந்தருளியிருப்பா, இதைப்பலகாலுங்கண்டிருப்பாரொருவர் பட்டரைவந்துஸேவித்து, "ஸ்வாமீ தேவரீா திருவோலக்கத்துக்கு வருகிற ஸாஸதரிபரஸித்தனுயிருக்கிறவன; அவன வந்தால ஸாமாந்யமாக வ்யவஹரித்தருளுகிறது, ஒருஸாது ஸ்ரீவைஷ்ணவர்வந்தாரென்றால் அவரைமிகவும் பரதிபத்திபண்ணி யருளுகிறது, இதிரண்டையுமெனக்கருளிச்செய்யவேணும" என்ன, "ஆனால, எப்போதுமபோலே அவர்களிரண்டுபேரும நாளையும்வருவாகள, அப்போது நீயுமெப்போதையுமபோலேபார்த்திரு, இரண்டுஞ்சொல்லுகிறோம்" என்ன, அவருமப்படியேபார்த்திருக்க, மற்றைநாள் வெடிவோறே அந்தப்ராஹ்மணன பரதமமவந்துஸேவிக்க, அவனை யெப்போதையும்போலே வினவியருளி, "நீராரைத்தான பரத்தத்வமென்று நினைத்திருக்கிறது" என்ன, "சிறிதுபரமாணங்கள் ப்ரஹ்மாவே பரத்தத்வமென்றுசொல்லுகிறது, சிறிது பரமாணங்கள விஷ்ணுவேபரத்தத்வமென்று சொல்லுகிறது, சிறிதுருத்ரனே

பரதத்த்வமென்று சொல்லுகிறது ; ஆகையினாலே நம்மாலே நிஸ்சயிக்கப்போமோ " என்ன, " நல்லது " என்றிருந்து, அவன்போனவாறே, ஸ்ரீவைஷ்ணவரொருவரெழுந்தருளி ஸேவிக்க, அவரையும் க்ருபைசெய்தருளி, " தேவரீராரைத்தான்பரதத்தவமென்றிருப்பீர் " என்ன, " தேவரீர 'ஸ்ரீய:பதிநாராயணனே பரதத்தவம்' என்றருளிச்செய்யுமே, அதொழிய அடியேன வேறொன்றறியேன் " என்ன, "இன்னமுமகருத்தஞ்சமாகநினைத்திருப்பதென் " என்ன, " எம்பெருமானார் திருவடிகளே உபாயோபேயம்' என்று ப்ரஸாதித்தருளுமே, அதனையேதஞ்சமாக நினைத்திருப்பேன " என்ன, திருவுள்ளமுகந்து, " அபசாரத்தைக்ஷமித்தருள, திருமாளிகைக்கெழுந்தருள " என்றருளிச்செய்து பார்த்திருந்தவரைப்பார்த்து, கண்டீரே " இருவர்க்குமுண்டானதாரதம்யம், ஆகையாலே இவரைவணங்கவோ ? அவனை வணங்கவோ, இப்படியன்றோ ஸ்வரூபஸ்த்திதியிருந்தது " என்றருளிச்செய்ய, அவரும் க்ருதார்த்தராய்ப்போனாரென்று. " அடியேனை " என்றத்தோடேசேரவருளிச்செய்கிறார் (துயக்குமனந்திரிவித்யாதி) திரியவிடுகையாவதென்னென்ன (உன்றேனேமலருமித்யாதி) கீழே, துயக்குமயக்குகளுக்கு ஸம்ஸயவிபர்யயபரதவஞ்சொல்லி, துயக்கு - மனந்திரிவு, மயக்கம் - கலவியாகவுமருளிச்செய்கிறார் (திரியவிட்டித்யாதி)

என்னளவிலன்றிக்கேயென்றது - " துயக்கன்மயக்கன் " என்றதின் பூர்வார்த்தத்தைக்கடாக்ஷித்து. த்விதீயார்த்தத்துக்கு, மயக்கென்றதின் சரமாவதி- " தோளிணையான் " என்றதென்று கண்டுகொள்வது. அங்ஙனன்றிக்கே - கலக்கை மாத்ரமன்றிக்கே.

காயமும் சீவனுமென்றுதொடங்கி, அதுமற்றும் யவர்க்குமே என்றநவயம.*

ஏழாம்பாட்டு.

தோளிணைமேலுநன்மார்பின்மேலுஞ்சுடர்முடிமேலுந்
தாளிணைமேலும்புனைந்ததண்ணந்துழாயுடையம்மான்
கேளிணையொன்றுமிலாதான்கிளருஞ்சுடரொளிமூர்த்தி
நாளணைந்தொன்றுமகலானென்னுடைநாவினுளானே.

ஆறாயிரப்படி.

(தோளிணை) தம்மோடு கலந்தருளுகைக்காக எம்பெருமான் தன்னுடைய நிரவதிகமாய் நிருபமமாய ஸ்வாபாவிகமான அழகுக்குமேலே, என்னோடே ஸம்ஸ்லேஷிக்கைக்காக தண்ணந்துழாயகொண்டணிந்து, ஒருக்ஷணமாத்ரமென்னைவிடில் தரிக்கமாட்டாதஸ்வபாவனாய்க்கொண்டு என்னுடைய நாவிலேவந்து புகுந்தருளினானென்கிறார்.... ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், நிரதிஸயபோகயபூதனானவன நிரந்தரமாக என்னாவிலுள்ளேயானானென்கிறார்.

தோளிணைமேலும் - ரக்ஷகமானதிருததோள்களிலும. நல் - அபிமதவிஷய மிருக்கும். மார்பினமேலும் - திருமார்பிலும. சுடர் - ஶேஷித்வௌஜ்ஜ்வல்யததை யுடைய. முடிமேலும - திருமுடியிலும். கேள் - இவவொப்பனை யழகுககுபபொருததின. இணை - உவமை. ஒனறும் - ஒருபடியாலும். இலாதான் - இல்லாதவனுய். கிளரும்சுடர் - ஸ்வாபாவிகதேஜஸ்ஸோடே திருததுழாயினுெளியுங்கலநது அபிவருத்தமான சுடாவிடுகிற. ஒளிமூரததி - தேஜோமயதிவ்யவிகரஹததையுடையனவன். நாள - நாடோறும். அணைநது - கிட்டி. ஒன்றும் - சிறிதும. அகலான்- அகலாதவனுயககொண்டு. எனனுடை நாவினுளான - எனஜிஹ்வாஸததாநததிலே யானுன.

கேள - பொருத்தம். . ... *

ஈடு - ஏழாம்பாட்டு

நானுகந்தபடியே யலங்கரிததுக்கொண்டு வந்தென்னுவிலே கலந்தானென்கிருர (தோளிணையித்யாதி) அபிமதவிஷய மிருநதவிடததுக குபபோவா ரவாகளுகந்தபடியே பூசிபபுலர்ததி யொபபிததுககொண்டு போமாபோலே, ஆழ்வாருகந்தபடியே திருத்துழாய் மாலையாலே யலங்கருதனுய் வந்தானுயிறறு.

(ஏவருகபபதுமதுவே, அவன்கொடுப்பதுமதுவேயிறே. * புள்ளூர்ந் துழாயக்கொயலவாய் மலாமேலமனத்தை யுடையராயிருப்பர் ; திருத்தாயாா சொல்லும்போதும் " வணடுதிவளும் தணணந்துழாயகொடீா " என்னும் ; இவர்தாம் * விரைமட்டலர் தண்டுழாயென்னும, * கண்ணன்கழறறுழாய பொன்செயபூணமென்முலைகென்று மெலியும் ; அவனும " தன்மனனுநீள்கழன்மேல்தண்டுழாய்நமககன்றிநலகான் " என்று இவாககலலது கொடான்.

(தோளிணைமேலும்) " ஸுமஹாஸுவபரிஷ்வஜே " (ஸுமஹாபரிஷ்வஜே) என்கிறபடியேயணைககககணிசிககிறதிருத்தோளகளிலும். (நன்மார்பின்மேலும) அணைபபிககுமவளிருககிற திருமாபிலும். (சுடர்முடிமேலும்) அணைத்துககொண்டுகினறுமேனுெக்கிபபாரத்தவாறே தன்னுடைய ஶேஷித்வப்ரகாஶகமாயிருககிற திருவபிஷேகததிலும. (தாளிணைமேலும்புனைந்த தண்ணநதுழாயுடையம்மான்) தனனுடையஶேஷிதவத்தை ஸ்த்திரிபபிககிற திருவடிகளிலும் சாததின திருததுழாயையுடைய ஸர்வேஸ்வரன். தோளிணையித்யாதிகளுக்கு - படடர், " வீரராயிருபபார் முறபட ஆயுததததுககிடுவாகள, அபபடியேதிருததோளகளுக்கிட்டான் ; ப்ரணயிகளாயிருபபாா அநந்தர மபிமதவிஷயத்துககிடுவர்கள். அபபடியே பெரிய பிராட்டியார் எழுந்தருளியிருக்கிற கோயில் கட்டணத்துக்குக்கொடுத்தான் ; ஆயுதத்துக்கு மபிமதவிஷயத்துக்கு மிட்டால, பின்னைத் தாந்தாம்விநியோகங்கொள்ளுமித்தனையிறே : அ

கையாலேதான்சூடினன்; ஸேஷம் பின்னேயடியாரிறேகைக்கொள்ளுவார், ஆகையாலே திருவடிகளுக்குச சாத்தினன்; ஆபத்துக்குதவுவா ரடியாரிறே,*தளர்ந்துமுறிந்தும் சகடவசுரருடல்வேறுப்பிளந்து வீயப்பொருவாரடியாரிறே; நம்முடைய வாபத்துக்களுக்குத் திருவடிகளே துணை, யானாற்போலே காணு மவனுடைய வாபத்துக்களுக்கும் திருவடிகளே துணையானபடி" என்றருளிச்செய்வர். (கேளிணையொன்றுமிலாதான்) கேள்என்றவித்தை - கேழ்என்றுக்கி, அதாவது - ஒப்பாய், இணையென்றும் - ஒப்பாய், திரளவுந்தனிததனியுமொப்பில்லாதானென்னுதல்;அன்றிக்கே, கேள்என்று - உறவாய், சேர்ந்தவொப்பில்லாதா னென்னுதல. (கிளரும்) ஆற்றுப்பெருக்குப்போலே மேலமேலனக்கிளராநிற்பதாய் நிரவதிகதேஜோரூபமான திவ்யமங்களவிக்ரஹத்தையுடையவன். "சுடா" என்றும், "ஒளி" என்றும் - பர்யாயம். இரண்டாலும் - மிக்கவொளியென்றபடி. ஒளி - பேரழகு. (மூர்த்தி) கீழ்ச்சொன்னவொப்பனை மிகையாம்படியான வடிவையுடையவன், (நாளணைந்து) நாள்தோறுமவந்து கிடடிமத்தனேயலலது கால்வாங்கமாட்டுகிறிலன். (என்னுடையித்யாதி) என்னுடையஸ்துதிவிஷய மானனென்னுதல்; அன்றிக்கே, "வாஙிதிஷ்டு" (வாசிதிஷ்ட்டந்) என்கிறபடியே, என்னுடையவாகிந்தரியத்துக்கு விஷயமானனென்னுதல... ....*

ஜீயர் அரும்பதம்.

ஏழாம்பாட்டு. (தோளிணையித்யாதி) (இப்பாட்டுக்குவாக்யார்த்தமாவது) (நானுசநதபடியே யலங்கரித்துககொண்டு வநதென்னுவிலேகலந்தானென்கிறதொன்று) இவருகந்தபடியே யொபபித்துககொணடுவருகைக்குஹேதுவேதென்ன (அபிமதேதயாதி) இவரபிமதராகையாலேயென்றபடி. (பூசிப்புலர்த்தியொப்பித்து அத்ரத்ருஷ்டாநதத்வேந "வராஹ...ராவேண" (வராஹருதிராபேண) "ஸ்திதயாவாஸ...தஸாவீ" (ஸ்த்திதயாபார்ஸ்வதஸ்சாமி) "தம்வெரூவணவஹாஸம்" (தம்வைஸ்ரவணஸங்காஸம்) இதிஸ்லோகத்ரயஞ்சதரஷ்டவயம. பகவதபிமதவிஷயஃ பராங்குஸார்ய இத்யத்ரப்ரமாணத்வேந, "எனனதுன்னதாவியும் - உனனதென்னதாவியுமினனவண்ணமேநின்றாய் - என்னதாவிமேலையாய்" இத்யாதிகம் த்ரஷ்டவயம். அலஸீதாமாலங்க்ருததவேநாகமநம் பராஙகுஸார்யஸ்யாத்யந்தமிஷடம்கிம், பகவாநபிதேவத்தாதிகிமித்யத்ராஹ (இவருகப்பதமிதி) இதுக்குப்ரமாணங்கள் (புள்ளூர்தியித்யாதி) திருவிருத்தம். பெரியதிருவடியைநடததும் ஸ்வபாவனை க்ருஷ்ணனுடைய மதுஸ்யநதியான திருத்துழாயினுடைய வட்டணிததவாயையுடைத்தான மலரிலே யபிநிவிஷ்டமானநெஞ்சோடேகூட. (வணடுதிவளுமித்யாதி) வணடுகள் மதுபாநம்பண்ணி, ரஸாயநஸேவைபண்ணினாற்போலே யொளிவிடுமபடியான திருத்துழாயைக்கொடுக்கிறீர். (விரைமட்டலரித்யாதி) பரிமளமும் மதுவும்பரவின செவ்வித்திருத்துழாயே

ன்றுநிற்கும். இதுவும் திருத்தாயார்வார்த்தையாகிலும், "என்னும்" என்று-மகளாசைப்படுகிறதாகச்சொல்லுகையாலே. "இவர்தாம்" என்னக்குறையில்லையிறே. (கண்ணன்கழலித்யாதி) க்ருஷ்ணன்திருவடிகளில் திருத்துழாயை, விரஹவைவர்ண்யமாகிற பொன்னாற்செய்யப்பட்ட ஆபரணஶோபையையுடைய, விஶ்லேஷாஸஹமான துவண்டமூலைக்கலங்காரமாகவேணுமென்றாசைப்பட்டு, அதிலுடையாமையாலே க்ருஶஶரீரையாகாநின்றாள். "அவனகொடுப்பதுமதுவே" என்றதுக்குப்ரமாணம் (அவனுமித்யாதி) (தனமன்னுநீளித்யாதி) தன்னுடையதாய ஆஶ்ரிதரிருந்தவிடத்தளவும் செல்லும் திருவடிகளினமேலே மன்னினஶ்ரமஹரமான திருத்துழாய் நமக்கன்றியுகந்து வேறொருவர்க்குக்கொடான.

"தோளிணைமேலும்" இத்யாதிக்ரமநியாமகம் தவேதாவததி (ஸாகாடமித்யாதி) (அணைக்ககணிசிகிறபீதி) அதராகாத்தாபராங்குஶார்யஃ. (அணைப்பிக்குமவள) புருஷகாரபூதையாகையாலே. (அணைத்துககொணடுநின்றிதி) "[illegible] [illegible]" (ஆதிராஜயமதிகம்புவநாநாமீஶதேபிஶாநயநகிலமௌளிஃ । சூளிகாமணிஸஹஸ்ரமரீசேர்ஹஸதிபூஷணபவத்யுதயாதரிஃ) என்றதிவ்விடத்திலே யநுஸந்தேயம். திருவபிஷேகத்திலும் - கிரீடத்திலும். (தன்னுடையஶேஷிதவத்தையிதி) "உன்தேனேமலருந்திருப்பாதம்" வடிவிணையில்லாமலாமகள மறநைநிலமகள பிடிக்கு மெல்லடியைக்கொடுவினையேனும்பிடிகக" இதி-போகயதாதிஶயேந ப்ராபததவேநசஸவயம் கைங்கர்யப்ரதிஸம்பநதிநௌ பூதவாஶேஷித்வம் ஸததிரீ குருதஶ்சரணௌ விதிபாவஃ. "தோளிணைஇதயாதிகளுக்குபட்டர்" இதயாதிவாகயம் - ரஸோக்தியாயிருக்கச்செய்தே, தாத்பாயாந்தரமாயுமிருக்கிறது. (அப்படியேதிருததோள்களுக்கு) ஶங்கசக்ராத்யாயுததரங்களாகையாலே. கோயில்கட்டணம் - அநதஃபுரம். "[illegible] [illegible]" (மலயஜஶஶிலிபதம்மாலதீதாமதலபம் ஸாமணிஸரவிதாநமகௌஸதுபஸ்வஸதிதீபம | தநுஜவருஷவிஷாஜ்ஞலலேகசிதரஞ்சலக்ஷ்மீலலிதக்ருஹமுபாஸேரங்கஸர்வம்ஸஹோராஃ.) (ஶேஷமபினணையிதயாதி) ரஸோகதிஃ. சரணௌதாஸாஃகிம்; தாஸாவா சரணௌஸயாதாம், தாஸாநாம்ஸவபோகோபகரண பூதமால்யாதிகமதாதவ்யம்கிமிதி ஶங்காதவயஞ்சபரிஹாரநாஹ (ஆபததுக்கிதி) அப்படியெமகேயுதவினதென்ன (தளர்நதுமிதயாதி) ஶகடாஸுரனுடைய வுடலானது கோபபுக்குலைநதுநடுவே முறிநதும் வேறும்படிபிளநதுருமாயும்படியாகத் திருவடிகளைக்கார்யங்கொண்ட ஸ்வாமியானவனே. நம்முடையஆபததுக்கொழிய, அவனுடைய ஆபததுக்குத துணையோவென்ன (நம்முடையவிதயாதி) துணையானபடியென்று - "பட்டரருளிசசெயவர்" என்றந்வயம்.

